## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**11 செப்டம்பர் 2015 / 27 துல்கஃதா 1436**

**”அல்-கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தில் பெற வேண்டிய பாடங்கள்**

الْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنِّعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவின் கட்டளைகளை ஆர்வத்துடன் பின்பற்றுவதன் மூலமும், அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமும் அல்லாஹ்வின் மீதான ”தக்வா” (பக்தியை) நமது உள்ளங்களில் ஏற்படுத்திக் கொள்வோமாக! ”தக்வா” என்பது அல்லாஹ் உடனான நமது உறவையும்

அவனது படைப்புகளுடனான நமது உறவையும் பாதிக்கும் எதிர்மறையான சக்திகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பதாகும். ”தக்வா” வை ஏற்படுத்திக் கொண்டால், அது, மறுமையில் மகிழ்ச்சியான, வளமும் செழிப்புமிக்க வாழ்க்கையை நாம் அடைவதற்கு உதவியாக இருக்கும்.

ஜமாஅத்தார்களே!

இந்த வாரப் பிரசங்கம் கடந்த வாரப் பிரசங்கத்தின் தொடர்ச்சியாகும். கடந்த வாரப் பிரசங்கம் திருக்குர்ஆனின் ”அல்-கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தைப் படித்து அதன் பொருளை அறியுமாறு ஆர்வப்படுத்தியது. இந்த அத்தியாயத்தில் காணப்படும் வரலாறுகளில் ஒன்று குகைவாசிகளான இளைஞர்களைப் பற்றியதாகும். ”ஈமான்” எனும் இறை நம்பிக்கை எந்தளவு அவசியமானது என்பதை அந்த வரலாறு வலியுறுத்துகிறது. குறிப்பாக, கஷ்டமான காலங்களில் நமது இறை நம்பிக்கையைப் பலப்படுத்த நாம் முயற்சி செய்வது அவசியம் என நமக்குப் பாடம் புகட்டுவதாக இந்த வரலாறு உள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-கஹ்ஃபி” எனும் அத்தியாயத்தின் 13-14-வரையிலான வசனங்களில் கூறுகிறான்:

نَّحْنُ نَقُصُّ عَلَيْكَ نَبَأَهُم بِٱلْحَقِّ ۚ إِنَّهُمْ فِتْيَةٌ ءَامَنُوا۟ بِرَبِّهِمْ
وَزِدْنَـٰهُمْ هُدًى ﴿١٣﴾ وَرَبَطْنَا عَلَىٰ قُلُوبِهِمْ إِذْ قَامُوا۟
فَقَالُوا۟ رَبُّنَا رَبُّ ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ لَن نَّدْعُوَا۟ مِن دُونِهِۦٓ
إِلَـٰهًا ۖ لَّقَدْ قُلْنَآ إِذًا شَطَطًا ﴿١٤﴾

பொருள்: அவர்களின் (குகை வாசிகள்) உண்மையான சரிதையை (நபியே!) நாம் உமக்கு எடுத்துரைக்கிறோம். திண்ணமாக, அவர்கள் தம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருந்த இளைஞர்களாவர். நாம் அவர்களை நேர்வழியில் மேலும் மேலும் முன்னேறச் செய்தோம். அவர்கள் எழுந்து, "யார் வானங்களுக்கும், பூமிக்கும் அதிபதியாக இருக்கின்றானோ அவனே எங்களுக்கும் அதிபதியாவான். அவனை விடுத்து வேறெந்தக் கடவுளையும் நாங்கள் அழைக்கமாட்டோம். அவ்வாறு அழைத்தால் திண்ணமாக நாங்கள் முறையற்ற பேச்சை பேசியவர்களாவோம்" என்று துணிந்து பிரகடனம் செய்தபோது அவர்களின் உள்ளங்களை நாம் திடப்படுத்தினோம்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

குகைவாசிகள் என்பவர்கள் இளைஞர்களின் ஒரு பிரிவாராக இருந்தார்கள். அவர்களை அல்லாஹ் 309 வருடங்கள் தூங்க வைத்தான். அவர்கள் தமது ஈமானின் பலத்தையும், தெளிவான சிந்தனையையும், துரிதமாக செயல்படுவதையும் பாதுகாக்க முயற்சித்தார்கள். வல்லமைமிக்க அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொள்வதிலிருந்து அவர்களைத் தடுத்த சக்திகள் மற்றும் கலாச்சாரத்திற்கு எதிராக சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க முயற்சித்தார்கள். எனவே, அல்லாஹ் அவர்களை 309 வருடங்கள் பாதுகாத்து வைத்தான். காரணம், அல்லாஹ் தான் அனைவரையும் பாதுகாப்பவனாக இருக்கின்றான்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

குகைவாசிகளுடைய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, இஸ்லாத்தில் இளமைப் பருவம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விவரிக்கப்படுகிறது. இளைஞர்கள் தான் சரியான இன்னும் உறுதியான புரிந்துணர்வை அடிப்படையாகக் கொண்டு, தமது ”ஈமான்” என்னும் இறை நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டிய தலைமுறையினராக உள்ளார்கள். சீரான மாற்றங்களை ஏற்படுத்துவதில் சகிப்புத்தன்மை மிக்கவர்களாக, முஸ்லிம் சமுதாயத்தின் எதிர்காலத்தை அல்லாஹ்வின் வழிகாட்டுதலுடன் வடிவமைப்பவர்களாக இருப்பவர்கள் இளைய தலைமுறையினர் தான். பொதுவாக, இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டுமென்பதற்காக, வாழ்க்கையில் வளத்தை ஏற்படுத்துகின்ற, முன்னேற்றத்தை நோக்கிச் செல்கின்ற இளைய தலைமுறையினரை உருவாக்குவது அவசியம் என குகைவாசிகளின் வரலாறு வலியுறுத்திக் கூறுகிறது.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூட தனது காலத்தில் இளைஞர்கள் மற்றும் பதின்ம வயதினர் மீது மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். எனவே, நாம் தற்காலத்தில் சந்தித்து வரும் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல்மிக்க, திறமையும் நற்பண்புமிக்க இஸ்லாமிய இளைஞர் தலைமுறையினரை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. அவ்வாறு செய்வதற்கு, நற்காரியங்களைச் செய்யத் தூண்டும் நற்பண்புகளையும் தனிதன்மைகளையும் அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்; அதற்கான ஆரோக்கியமான, உகந்த சூழ்நிலையை நாம் அவர்களுக்கு உருவாக்க வேண்டும். நமது இளைய தலைமுறையினரின்

தனித்தன்மையை நாம் மேம்படுத்த வேண்டுமெனில் அவர்களிடம் ஆன்மீகம், உடல் மற்றும் உள்ளம் சம்பந்தமான முன்னேற்றத்தை உருவாக்குவது அவசியமாகும்.

மேலும், நமது இளைய தலைமுறையினர், சமுதாயத்தின் மற்ற உறுப்பினர்களை முன்மாதிரியாக எடுத்துக் கொள்வார்கள். அவர்களை உற்று நோக்குவார்கள். எனவே, சமுதாயத்திலுள்ள பெரியவர்கள் நல்ல முன்மாதிரியாக அமைவதற்கு முயற்சிக்க வேண்டும். நம்பிக்கைக்குரிய வழிகளை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். உதாரணமாக, பெற்றோர்களாக உள்ள நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இல்லாத போது, நமது இளைய தலைமுறையினர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருப்பார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்? எதார்த்த வாழ்க்கை அல்லது ”ஆன் லைன்” வாழ்க்கை எதுவாக இருப்பினும், அவற்றில் நமது நடத்தைகள் வெற்றிமிக்கதாக இல்லாத போது, அவை நற்பண்புமிக்கவையாக, கிருபையானவையாக இல்லாத போது, நமது இளைய தலைமுறையினரின் நடத்தைகள் அவ்வாறு சிறப்பாக இருக்குமென எப்படி எதிர்பார்க்க முடியும்?

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

முறையான கல்வியறிவும், ஆரோக்கியமான சுற்றுப் புறச்சூழ்நிலையும் தான், தற்காலத்தின் சிக்கலான சவால்களை எதிர்கொள்வதற்கு நமது

இளைய தலைமுறையினரைத் தயார் செய்யும் முக்கிய அம்சங்களாக உள்ளன. சையன்ஸையும் இஸ்லாத்தின் அடிப்படை விஷயங்களையும் ஒருங்கிணைக்கும் கல்வியறிவை அவர்கள் பெறுவது அவசியமாகும். அவர்களுக்கான கல்வி முறை ஒன்றிணைக்கப்பட்டதாகவும், ”தவ்ஹீத்” (ஏகத்துவச் சிந்தனையுடன்) பரிபூரணமானதாகவும் இருப்பது அவசியமாகும். அவர்களிடம் காணப்படும் கல்வியறிவு பணிவான உணர்வை (தவாதுஃ) அவர்களிடம் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். கர்வத்தைத் தூண்டுவதாகவோ, அல்லாஹ்வை விட்டு மற்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடியதாகவோ, தனது கருத்து தான் சரியானது எனும் பிடிவாத குணத்தை ஏற்படுத்தக் கூடியதாகவோ இருப்பது கூடாது.

இளைஞர்கள் எவற்றைப் படிக்கின்றார்களோ, எதிலிருந்து குறிப்புகளை எடுக்கின்றார்களோ அத்தகைய மூலங்கள் நம்பகமான மூலங்களாக இருப்பது அவசியமாகும். குறிப்பாக, அவர்கள் பெறும் கல்வியறிவுகள் அவர்களை நேரான பாதையிலும் சரியான சிந்தனையின் பாலும் செலுத்துவதாக இருக்க வேண்டும். இவ்விதமான ஒருங்கிணைந்த, பரிபூரணமான கல்வியறிவானது, இளைஞர்களை, சகிப்புத் தன்மைமிக்கவர்களாக, சவால்களை எதிர்கொள்பவர்களாக, அவர்களை வழிகெடுக்கும் எதிர்மறையான சக்திகளை விட்டும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும். மேற்கூறப்பட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும் சக்தியானது, இளைஞர்கள் தமது சுற்றுப் புறங்களை அறிவதற்கும், அவர்கள் தமது கல்வியறிவைச் செயல்பாட்டில் கொண்டு வருவதற்கும் ஆர்வமூட்டும்.

இன்று, இங்கு ஒன்றுகூடியுள்ள அனைத்து இளைஞர்களைப் பார்த்து கூறுகிறேன்:

முஸ்லிம்கள் அல்லது முஸ்லிமல்லாதவர்களுக்கிடையே சன்மார்க்கக் கருத்தை நீங்கள் வெளிப்படுத்த முயற்சித்தால் உங்கள் கருத்துக்களையும் சிந்தனைகளையும் நுட்பமான முறையில் வெளிப்படுத்துங்கள். நற்பண்புகளைக் கடைப்பிடியுங்கள்! மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளியுங்கள். தீவிரமாகச் செயல்பட வேண்டாம்; உங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்காதீர்கள்! உங்களை சிறந்த மனிதர்களாக உருவாக்குவதற்கு உண்மையாக விரும்பும் நபர்களிடம் நீங்கள் சரியான இஸ்லாமியக் கல்வியறிவைப் பெறுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்!

ஒருவர், சன்மார்க்கத்தை ஆழமாக ஆய்வு செய்து கற்றுக் கொள்ளும் போது, அவர் மரியாதையானவராகவும், கீழ்படிந்தவராகவும், தனது ஆய்விலும் படிப்பிலும் மேற்கொண்டு ஆர்வமிக்கவராகவும் ஆகி விட வேண்டும். அதிகக் கருணைச் சிந்தனைகளைப் பரப்பும் நண்பராகவும் அண்டை வீட்டாராகவும் அமைய வேண்டும். எவராவதொருவர் சமய வெறி பிடித்தவராக இருந்தால், உங்களுக்கு எதிராக வெறுப்பையும் கோபத்தையும் விதைப்பவராக இருந்தால், உங்களிடம் பரிபூரணமான இறை நம்பிக்கை ஏற்பட விடாமல் தடுப்பவராக இருந்தால் அப்போது நீங்கள் அவர் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். விஷயம் இவ்வாறிருக்க, மற்ற முஸ்லிம்களை ”காஃபிர்” என முத்திரை குத்திப் போதிக்கும் நபரைச் சந்தித்தால் எந்தளவு கவனமாக இருக்க வேண்டும்? அப்படிப்பட்டவர்களை விட்டும் அகன்று விடுவது அவசியமாகுமல்லவா?

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-மாயிதா" எனும் அத்தியாயத்தின் 77-வது வசனத்தில் கூறுகின்றான்:

قُلْ يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لَا تَغْلُوا۟ فِى دِينِكُمْ غَيْرَ ٱلْحَقِّ وَلَا
تَتَّبِعُوٓا۟ أَهْوَآءَ قَوْمٍ قَدْ ضَلُّوا۟ مِن قَبْلُ وَأَضَلُّوا۟ كَثِيرًا
وَضَلُّوا۟ عَن سَوَآءِ ٱلسَّبِيلِ ﴿٧٧﴾

பொருள்: (நபியே!) நீர் கூறும்: "வேதம் அருளப்பட்டவர்களே! உங்கள் தீனில் (மார்க்கத்தில்) அநியாயமாக எதையும் மிகைப்படுத்தாதீர்கள்! மேலும், உங்களுக்கு முன்னர் தாமும் வழிகெட்டு, பலரையும் வழிகெடுத்து மேலும், நேரிய வழியிலிருந்து தடம்புரண்டு போன மக்களுடைய விருப்பங்களை நீங்கள் பின்பற்றாதீர்கள்!"

நடுநிலையானப் போக்கை நமக்குக் கற்றுத் தந்த நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் போதனையைப் பற்றிப் பிடிப்போமாக! நடுநிலையானப் போக்கை நாம் பின்பற்றுவதால் உண்மையைத் தவிர்த்து அதனைத் தியாகம் செய்து விட்டவர்களாகவோ, நமது சன்மார்க்கத்தை சிறுமைப்படுத்தியவர்களாகவோ நாம் ஆகி விட மாட்டோம். நடுநிலை தான் இஸ்லாத்தின் வழிமுறையாகும். "இபாதத்" எனப்படும் வணக்க வழிபாடுகள், வாழ்க்கை முறைகள், செயல்கள் மற்றும் தோற்றங்கள் எதுவாக இருப்பினும் அவற்றில் நடுநிலையைக் கடைப்பிடிப்பது தான்

இஸ்லாமிய வழிமுறையாகும். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் நமக்கு நினைவூட்டியுள்ளார்கள்:

"மார்க்க விஷயத்தில் தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்; அவ்விஷயத்தில் கவனமாக இருங்கள். மார்க்க விஷயத்தில் தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடித்ததன் காரணமாகவே உங்களுக்கு முன்பிருந்த சமூகங்கள் அழிக்கப்பட்டார்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம்களான அஹ்மத், அந்-நஸயீ, இப்னு மாஜா, அல்-ஹாகிம் ரஹ்மஹுமுல்லாஹு அஜ்மயீன்)

யாஅல்லாஹ்! எங்களின் அனைத்து பாவங்களையும் மன்னிப்பாயாக! நற்காரியங்களைச் செய்வதின் பால் எங்களது கவனத்தைத் திருப்புவாயாக! எங்களது இளைய தலைமுறையினரை எங்களின் உள்ளங்களுக்கு இணக்கமானவர்களாக ஆக்குவாயாக! உனது மார்க்கத்தை உயர்த்துவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியிலும் உனது நேர்வழியை அவர்களுக்குக் காட்டுவாயாக! அவர்களை உனது சொர்க்கத்தில் உனது நல்லடியார்களுடன் சேர்த்து வைப்பாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.